ஸ்ரீ : |
ஜய ஸ்ரீ ராம |
ஸ்ரீமதே ராமானுஜாய நம : |

# Sri Krishnasuri's Commentary

Smt. Krishna Krupa

श्रीमत् कृष्ण समाह्वाय नमो यामुन सूनवे |
यत् कटाक्षैक लक्ष्याणां सुलभ : श्रीधरस्सदा ||

கட்டுரையின் ஸாரம் :

ஸ்ரீமத் கிருஷ்ண ஸூரி என்னும் திருநாமம் கொண்ட ஸ்வாமி பெரியவாச்சான் பிள்ளை வால்மீகி ராமாயண ஶ்லோகங்களுக்கு 'ஸ்ரீ ராமாயண தனி ஶ்லோகம்' என்றொரு வியாக்யானம் அருளியுள்ளார். இந்தக் கட்டுரை அந்த உரை நூலைப் பற்றிய சுருக்கமாகும்.

<u>பெரியவாச்சான் பிள்ளையின் வரலாறு - சிறு குறிப்பு :</u>

ஸ்வாமி பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் முக்கியமான ஒரு வ்யாக்யாதா. இவருடைய இயற்பெயர் ஸ்ரீ கிருஷ்ண ஸூரி என்பதாகும். இவர் தஞ்சாவூர் மாவட்டம் திருவெள்ளியங்குடிக்கு அருகேயுள்ள சங்கநல்லூர் என்னும் சேங்கனூர் கிராமத்தில் பொ. யு. 1167-ல் ஸர்வஜித் வருஷத்தில் ஆவணி கிருஷ்ணபக்ஷ அஷ்டமி ரோஹிணியில் ஸ்ரீ ஜயந்தியன்று பூர்வசிக ஸ்ரீ வைஷ்ணவ ப்ராஹ்மண குலத்திலே யாமுனாசார்யர் - நாச்சியாரம்மாள் தம்பதிக்கு திருக்குமாரராய்த் தோன்றினார்.

இவருடைய குரு நம்பிள்ளை என்பவர். 'ராமஸ்ய த³க்ஷிணோ பா³ஹு:' என்று பெருமாளுக்கு இளையபெருமாள் போலே நம்பிள்ளைக்கு இவர் இருந்தார்.

நாலாயிர திவ்ய பிரபந்தம் முழுமைக்கும் வ்யாக்யானம் செய்தவர் இவர் ஒருவரே. இவர் நூற்றுக்கணக்கான கிரந்தங்களை அருளியிருக்கிறார். அவற்றுள் 60 கிரந்தங்களுக்கும் மேல் இப்போது கிடைக்கின்றன. இம்மஹாசார்யர் வேத பாஷா விற்பன்னராயிருந்த போதிலும் வடமொழியில் கிரந்தங்கள் ஏதும் இயற்றவில்லை. யாவருக்கும் புரியும்படி முத்தும் பவளமும் போல ஸம்ஸ்க்ருதமும், தமிழும் கலந்த மணி ப்ரவாள நடையிலேயே கிரந்தங்களை அருளியுள்ளார்.

கு³ணைர்தா³ஸ்யமுபாக³த: | என்று யாவரும் ஆட்படும்படியான ஸத்வ குண ஸம்பந்நர் இவர். இவருடைய கிரந்தங்களில் எங்கும் வ்யக்தி தூஷணமோ, இதர கிரந்த தூஷணமோ காண முடியாது. ஒருமுறை இவர் குடும்பத்தோடு திருமலை யாத்திரை சென்றிருந்தார். அங்கு திருமலை ஸ்ரீநிவாஸனிடமிருந்து

திருவேங்கடமுடையான் விக்ரஹம் ஒன்றைப் பெற்று சேங்கனூரில் அத்திருமேனியை ப்ரதிஷ்டை செய்தார் என்று சரித்திரம் வழங்குகிறது.

இவர் காலத்துக்கு முன்பு வாழ்ந்த ஆசார்யர்களுக்கு அரசர்களால் ஆபத்துக்கள் நேர்ந்தன. இவர் காலத்திற்குப் பிறகு துருஷ்க படையெடுப்புகள் நேர்ந்தன. அதனால் வைஷ்ணவ வரலாற்றில் இவருடைய காலம் (பொ. யு. 1167-1262) நல்லடிக்காலம் என்று போற்றப்படுகிறது.

விருதுகள் :

இவருடைய வ்யாக்யானங்களை திருச்செவிசாற்றிய ஸ்ரீரங்கநாத பகவான் இவருக்கு 'அபயப்ரத ராஜர்' என்றொரு சிறப்புப் பெயரளித்து கௌரவித்தான். மேலும் இவருக்கு 'பரம காருணிகர்', 'அபார கருணாம்ருத ஸாகரர்', 'ஸ்ரீ ராமாயணப் பெருக்கர்' , 'வியாக்கியான சக்கரவர்த்தி' என்கிற விருதுகளும் உள்ளன.

சிஷ்யர்கள் :

இவருக்கு ஔரஸ புத்திரர் இல்லை. இவர் தம் பாகிநேயரான நாயனாராச்சான் பிள்ளை இவருக்கு தத்த புத்திரரும், சிஷ்யருமாவார். மேலும், இவருடைய முக்கிய சிஷ்யர்கள் :-

- ❖ வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயர்
- ❖ அஹோபில மட ஸ்தாபகரான ஆதி வண்சடகோப ஜீயரின் ப்ராசார்யரான ஸ்ரீ ரங்காசார்யர்
- ❖ பரகால தாஸர்.

ஆகியோர்.

பெருமைகள் :

இவர் திருக்கண்ணமங்கை திவ்ய தேசத்தில் உறையும் பக்தவத்ஸலப் பெருமாளான கண்ணபிரானின் அவதாரம் என்று ஐதிஹ்யம்.

பெரியவாச்சான் பிள்ளை இல்லையென்றால் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமில்லை என்று சொல்லும்படியான பெருமை பெற்ற மஹாசார்யர் இவர்.

<u>பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீ ராமாயண உரையின் ஏற்றம் :</u>

பொதுவாக, எந்த ஒரு நூலுக்கும் மூன்று பெருமைகள் உள்ளனவா என்பதைப் பரிசோதித்து அறிய வேண்டியது அவசியம். அவை :-

- ★ வக்த்ரு வைலக்ஷண்யம்

- ★ கிரந்த வைலக்ஷண்யம்
- ★ விஷய வைலக்ஷண்யம்

ஸ்ரீ கிருஷ்ண ஸூரியின் ஸ்ரீ ராமாயண தனி ஶ்லோகம் வியாக்யானத்தில் இம்மூன்று பெருமைகளும் உள்ளன.

வக்த்ரு வைலக்ஷண்யம் :

மற்ற ராமாயண உரைகள் எல்லாம் ஒரு பண்டிதரால் எழுதப்பட்டவை. ஆனால் ஸ்ரீ ராமாயண தனி ஶ்லோகத்தின் கிரந்த கர்த்தாவான ஸ்ரீ கிருஷ்ண ஸூரி பண்டிதர் மட்டுமின்றி ஒரு அவதார புருஷரும் ஆவார் ; மேலும், இவர் பகவதம்ச பூதர். அதிலும் ஸ்ரீ கிருஷ்ண பகவானின் அம்சாவதாரமாய்த் தோன்றி ராமாயணத்துக்கு இவர் பாஷ்யம் பண்ணியுள்ளார் என்பது ஸ்ரீ ராமபிரானுக்குப் பெரிய வெற்றியாகும் . இதனால் கண்ணபிரானும் மிகவும் ஈடுபடும்படி ராம கதை உள்ளது என்பது தெளிவாகிறது . இது தனி ஶ்லோகத்திற்கு உண்டான வக்த்ரு வைலக்ஷண்யமாகும்.

கிரந்த வைலக்ஷண்யம் :

ஸ்ரீ கிருஷ்ண ஸூரி அருளிச் செய்த திவ்ய கிரந்தங்கள் பலவற்றுள் ஸ்ரீ ராமாயண தனி ஶ்லோகம் என்பது தனிப்பெரும் பெருமை பெற்று விளங்குகிறது. ஶ்ருதிகளிலிருந்தும், தர்ம சாஸ்திரங்களிலிருந்தும், இதிஹாஸ புராணங்களிலிருந்தும், காவ்ய நாடக அலங்கார கிரந்தங்களிலிருந்தும், மீமாம்ஸா வ்யாகரண ந்யாய நீதி ஸாமுத்ரிகா ஜ்யோதிஷாதி சாஸ்திர கிரதங்களிலிருந்தும் பற்பல விஷயங்களை எடுத்தெழுதியும் பல்லாயிரக்கணக்கான பிரமாணங்களை மேற்கோளாகக் காட்டியும் ஸ்ரீ ராமாயண ஶ்லோகங்களை இவர் விவரித்தருளிருப்பதைக் காணுந்தோறும் இவருடைய ஸர்வதோமுகமான பாண்டித்யமும், ராஸிக்யமும் நன்கு விளங்கும்.

விஷய வைலக்ஷண்யம் :

- ➢ வேதத்தின் அவதாரமாயும்,
- ➢ ஆதி காவ்யமாயும்,
- ➢ த்வயம் , காயத்ரி முதலான மஹா மந்த்ரங்களுக்கு விவரணமாயும்,
- ➢ சரணாகதி சாஸ்த்ரமாயும்,
- ➢ அப்பழுக்கற்ற குணக் கடலான திவ்ய தம்பதியை கதாநாயக நாயகிகளாகக் கொண்டதாயும்

இருக்கும் இதிஹாஸ ஶ்ரேஷ்டமான ஸ்ரீ ராமாயணத்தின் உரை நூல் என்பதே தனி ஶ்லோகத்திற்கு உண்டான விஷய வைலக்ஷண்யம் ஆகும்.

ஸ்ரீ கிருஷ்ண ஸூரியின் ஸ்ரீ ராமாயண தனி ஸ்லோகத்தின் அமைப்பு :

ஸ்ரீமத் கிருஷ்ண ஸூரியினுடைய ராமாயண வியாக்யானத்திற்கு 'ஸ்ரீ ராமாயண தனி ஸ்லோகம்' என்று பெயர். இவர் ராமாயண ஸ்லோகங்கள் முழுமைக்கும் உரை இயற்றவில்லை. வால்மீகி ராமாயண ஸ்லோகங்கள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து அவைகளுக்கு மட்டும் பாஷ்யம் பண்ணியுள்ளார்.

இவருடைய ராமாயண வியாக்யானத்தை மூன்று பாகமாகப் பிரிக்கலாம்.

- தனி ஸ்லோக வ்யாக்யானம்.
- அபயப்ரதான ஸாரம்.
- திவ்ய பிரபந்த உரைகளில் உதாஹரித்த ராமாயண ஸ்லோக விவரணம்.

a)இதில் முதல் பாகமான அல்லது பூர்வ பாகமான தனி ஸ்லோகத்தில் பாலகாண்டம் தொடங்கி சுந்தரகாண்டம் வரை 38 ஸ்லோகங்களுக்கு கிருஷ்ண ஸூரியின் உரை உள்ளது.

தனி ஸ்லோகத்தின் உருவம் :

1. பால காண்டம் – 5 ஸ்லோகங்கள்.
2. அயோத்யா காண்டம் – 15 ஸ்லோகங்கள்.
3. ஆரண்ய காண்டம் – 4 ஸ்லோகங்கள்.
4. கிஷ்கிந்தா காண்டம் – 4 ஸ்லோகங்கள்.
5. ஸுந்தர காண்டம் – 10 ஸ்லோகங்கள்.

b) இதில் இரண்டாவது பாகமான அல்லது உத்தர பாகமான தனி ஸ்லோக வியாக்யானத்திற்கு அபயப்ரதான ஸாரம் என்று பெயர். இதில் வால்மீகி ராமாயண யுத்த காண்டத்தில் உள்ள 120 ஸ்லோகங்களுக்கு பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் உள்ளது. உத்தர காண்டத்தில் 'ஸ்நேஹோ மே பரமோ ராஜந்' என்கிற ஒரேயொரு ஸ்லோகத்திற்கு மட்டும் இவரது உரை உள்ளது.

இந்த இரண்டாவது பாகத்தில் தான் ராமபிரானின் அபய ப்ரதான ஸ்லோகத்திற்கும், சீதாப்பிராட்டியின் அபய ப்ரதான ஸ்லோகத்திற்கும் அமுதிலுமினிய வியாக்கியானங்களை அருளிய படியால் 'அபய ப்ரத ராஜர்', 'அபய ப்ரத குரு' என்றெல்லாம் இவர் பட்டம் பெற்றார்.

c) இந்த இரண்டு பாகங்களிலும் எடுக்கப்பட்ட 38 மற்றும் 121 ஸ்லோகங்களைத் தவிர 4000 திவ்ய பிரபந்த வியாக்கியானங்களில் நூற்றுக்கணக்கான ராமாயண ஸ்லோகங்களை எடுத்து இவர் உரை செய்துள்ளார். இதனை மூன்றாம் பாகமாகக் கொள்ளலாம்.

பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீ ராமாயண தனி ஸ்லோகம் இரண்டு பாகங்களுக்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் பத்திரிகை ஆசிரியர் -- புத்தூர் வக்கீல்

- ஸுதர்சனர் ஸ்ரீ.உ.வே. S.கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் அவர்கள் [ तनिश्लोक दर्पणम् ] தனிஶ்லோக த³ர்பணம் ( தனி ச்லோகக் கண்ணாடி ) என்கிற பெயரில் எளிய நடை விவரணம் எழுதியுள்ளார்.

முதல் பாகத்தில் ஒரு ஶ்லோகம் :

பெரியவாச்சான் பிள்ளையின் ராஸிக்யம் விளங்கும்படியான ஒரு ஶ்லோகம் இது.

अस्मिन मया सार्धमुदारशीला शिलातले पूर्वमुपोपविष्टा |
कान्तस्मिता लक्ष्मण जातहासा त्वामाह सीता बहु वाक्य जातम् || (3-63-12)

தனி ஶ்லோக உரை :

அவதாரிகை :

பிராட்டியோடு கூடியிருந்தபோது ஒரு நாள் தாமும் பிராட்டியும் நீர் விளையாட்டுகள் விளையாடி சிருங்கார ரஸத்தோடு பரிமாறப்பெற்ற ஓரிடத்திலே, பிராட்டியைப் பிரிந்து தாமும் லக்ஷ்மணனுமாய்த் தேடிக் கொண்டு வரும்போது அவ்விடத்தைக் கண்டு, லக்ஷ்மணனைப் பார்த்து இந்த ஶ்லோகத்தை அருளிச் செய்கிறார் ராமபிரான்.

வியாக்கியானம் :

अस्मिन शिलातले –
இப்படி வெறும் தரையாய் இருக்கிற இடத்திலேயன்றோ அன்று நாம் பேரின்பம் அனுபவித்தது.

मया सार्धम् – 'என்னோடு கூட' என்று தன்னை த்ருதீயா விபக்தியில் சொல்லிக் கொள்கிறார் ராமபிரான்.

सह युक्ते अप्रधाने – என்று பாணினி ஸூத்ரம். அப்ரதானமான விஷயத்தைச் சொல்ல மூன்றாம் வேற்றுமையைப் பயன்படுத்துவது வடமொழி மரபு.

சிருங்கார பரிமாற்றத்தில் ராமரும் அன்று அப்ரதானராய் இருந்தார் ; எப்படியெனில், 'நாடகத்தில் காதல் விளையாட்டுகளைக் காண வந்த சோழ அரசன் போல்' என்கிறார் வ்யாக்யாதா. இதிலிருந்து அவர் காலத்திலேயே வீதி நாடகங்கள் நடைபெற்று இருக்க வேண்டும் என்ற ஊகம் ஏற்படுகிறது.

उदारशीला –
சீதை ராமருக்குத் தன் அனுபவத்தைக் கொடுப்பதில் வண்மை மிகுந்தவள். அயோத்தியில் இருந்த நாள் மாமனாரான தசரதருக்கும், மாமியார்களுக்கும் கூசி அளவு பட்டு போகத்தைத் தந்தவள் இப்போது கூச வேண்டிய பெரியோர்கள்

ஒருவருமில்லாமல் தனி இருப்பாகையாலே தன் அனுபவத்தைப் பூர்ணமாக ராமருக்குக் கொடுத்தாளாயிற்று. அதை நினைத்து 'உதார[illegible]லா' என்கிறார்.

शिलातले पूर्वमुपोपविष्टा –
ஜலக்ரீடை பண்ணுகிறதோர் இடத்திலே பெருமாள் ஒரு கற்பாறையிலே ஏற முற்பட, அங்கு தான் முன்னதாகவே சென்று அடைத்துக் கொண்டாள் சீதை . இப்படியே அப்பாறையின் எல்லாப் பகுதிகளிலும் பிராட்டிக்கே வெற்றியும், பெருமாளுக்கே தோல்வியும் ஆயிற்று.

कान्तस्मिता लक्ष्मण जातहासा – இனிய புன் சிரிப்பை உடையவள் அப்போது பிறந்த வெற்றியாலே பெருஞ்சிரிப்பை உடையவளானாள்.

त्वामाह सीता बहु वाक्य जातम् –
தன்னிடம் தோற்று அத்தாலே லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டு நிற்கும் ராமரைப் பற்றி இளையபெருமாளிடம் பரிஹாஸமாகப் பலபடியான வாக்ய ஸமூஹங்களைச் சொன்னாள் சீதை.

இரண்டாம் பாகத்தில் ஒரு ஶ்லோகம் :

பெரியவாச்சான் பிள்ளையின் பாண்டித்யம் விளங்கும்படியான ஒரு ஶ்லோகம் இது.

चापमानय सौमित्रे शरांश्चाशीवीषोपमान् |
सागरं शोषयिष्यामि पद्भयां यान्तु प्लवङ्गमा : ||
(6-21-22)

அபயப்ரதான ஸாரம் :

அவதாரிகை :

கடலரசன் வந்து அருள் புரிய வேணும் என்று கடலை நோக்கி தர்ப்ப சயனத்தில் கிடந்த ராமபிரான், கடல் வந்து முகம் காட்டாமையாலே ஆழியைச் சீறி, "என்னை இந்த மீன் வாழும் கடல் கையாலாகாதவனாய் நினைக்கிறது ; கொண்டு வா வில்லை" என்று இலக்குவனைப் பார்த்துச் சொல்லும் ஶ்லோகம் இது.

வியாக்கியானம் :

चापमानय – வில்லை எடுத்து வா.

➢ குணஹீனனான இவனை அடக்கும்படி குணம் (1.நற்குணம் 2.நாண்) உடைய வில்லைக் கொண்டு வா.

- ➢ இதன் கட்டைக் ( வரம்பைக் ) குலைக்கும்படி கட்டுடைய (உறுதியுடைய) வில்லைக் கொண்டு வா.

இளையபெருமாள் தான் படுக்கையானபடியாலே, படுக்கைப் பற்றை படைப்பற்றாக்கவொண்ணாது என்று சிறிது காலதாமதம் செய்து நிற்க, கூறுகிறார் ராமபிரான்.

सौमित्रे – சுமித்திரையின் பிள்ளையே !

- ★ சுமித்திரை முதலான தாய்மார் சொன்னதைத்தான் செய்வாயோ? தமயன்மார் சொன்னதைச் செய்யாயோ?

- ★ ஏகம் து³:க்க²ம் ஸுக²ஞ்ச நௌ (4-5-18) என்று நம் நட்பைப் பார்த்தால் நம்மை பண்ணின பரிபவம் உமக்கும் இல்லையோ?

அவ்வார்த்தை நெஞ்சில் பட்டு வில்லைக் கொண்டு வந்து கொடுத்தார் லக்ஷ்மணன்.

शरांश्च – சரங்களையும்

- ➔ அம்பில்லா வில்லால் என்ன பயன்? அம்பைக் கொடுப்பதன் மூலம் இக்குறையையும் போக்குவாயாக!

- ➔ முள்ளை முள்ளைக் கொண்டே எடுப்பது போலே [ कन्टकेनेव कण्टकं ] (பாகவதம் 1-15-34), அம்புக்கு (ஜலத்துக்கு) அம்பைக் கொண்டே (பாணங்களைக் கொண்டே) அழிக்க வேண்டும்.

இப்படி ராமர் அருளியவுடன் வலிமையற்ற சில அம்புகளைக் கொடுத்தார் லக்ஷ்மணர்.

आशीवीषोपमान् – விஷப் பாம்பை ஒத்தவைகளை.

ஆதிசேஷனான உம்மைப் போலே “எதிரிகளை அழி” என்று நான் சொன்னால் விஷாக்னி உமிழ்ந்து கொல்லவல்ல அம்புகளைக் கொண்டு வாரீர்.

என்னதான் திருவுள்ளத்தில் ஓடுகிறது எனில்,

सागरं शोषयिष्यामि – கடலை வற்றச் செய்கிறேன்.

- ❖ ஊணடங்க வீணடங்குமன்றோ. இதனுடைய ஜீவனத்தை (1.ஜலத்தை 2.உயிர் வாழ்வை) வற்றச் செய்யவன்றோ நினைக்கிறேன் நான்.

- ❖ ஏகஸ்த்வமஸி லோகஸ்ய ஸ்ரஷ்டா ஸம்ஹாரகஸ் ததா² (ஜிதந்தே ஸ்தோத்ரம் 1-3) என்கிறபடியே ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்கள் இரண்டும் பரம்பொருளாகிற இவன் ஒருவனே செய்யும் காரியமன்றோ!
- ❖ அன்று 60,000 ஸகரர் வெட்டினதை இன்று நான் ஒருவனே இல்லையாக்குகிறேன்.

இத்தால் பெறப் புகுகிற பிரயோஜனமென்? என்னில் :

पद्भयां यान्तु प्लवङ्गमा : – தாவிச் செல்லும் வானரர் காலால் செல்லட்டும்.

- ☐ வானரர்கள் கைநீச்சு நீஞ்சிக் கஷ்டப்படாமல் காலிட்டு நடந்து சுலபமாகக் கடலைக் கடக்கட்டும்.
- ☐ வானரர்கள் இக்கரையிலிருந்து அக்கரைக்குத் தாவி அவதியுறாமல் காலாற நடந்து செல்லட்டும்.

மூன்றாம் பாகத்தில் ஒரு ஶ்லோகம் :

திவ்ய பிரபந்த வ்யாக்யானத்தில் எடுத்துள்ள ராமாயண ஶ்லோகம் மற்றும் விவரணம் :

नमोस्तु रामाय सलक्ष्मणाय
देव्यै च तस्यै जनकात्मजायै | (5-13-60)
– ஹநுமத் வாக்யம் .

திவ்ய பிரபந்தத்தில் நாச்சியார் திருமொழியில் ‘உன்னையும் உம்பியையும் தொழுதேன்’ (1-1) என்று ஒரு பாசுர வரி உள்ளது. ஆண்டாள் கண்ணபிரானை ஆசைப்பட்டு மன்மத பூஜை செய்கிறாள். அப்போது காமனோடு சேர்த்து அவன் தம்பியான ஶ்யாமனையும் தொழுகிறாள். இந்த இடத்திற்கு உரையிடும்போது ஸ்வாமி பெரியவாச்சான் பிள்ளை
‘நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய’ என்கிற ராமாயண ஶ்லோகத்தை எடுக்கிறார்.

லக்ஷ்மணரை முன்னிட்டுக் கொண்டு ராமபிரானைப் பற்றிய அனுமனைப் போலே, ஆண்டாளும் காம பூஜையின் போது ‘உன்னையும் உம்பியையும் தொழுதேன்’ என்று மன்மதனிடம் சொல்வதாக வ்யாக்யானமிடுகிறார் கிருஷ்ண ஸூரி. இந்த ராமாயண ஶ்லோக பாஷ்யம் முதலிரண்டு பாகங்களில் இல்லை.

<u>நிறைவு :</u>

ஸ்ரீ ராமாயணமும், திவ்ய பிரபந்தங்களும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு இரண்டு மதில்களாகக் கீர்த்தி பெற்றவை. இவற்றுள் காலத்தால் மிகவும்

முற்பட்டதும், இதிஹாஸ ஶ்ரேஷ்டமுமான ஸ்ரீ ராமாயணத்தின் அர்த்த விசேஷங்களை விவரித்துத் திருமதில் திருப்பணி செய்த ஸ்வாமி பெரியவாச்சான் பிள்ளையின் திருவடிகளுக்குத் தலையல்லால் கைம்மாறிலோம்.

| ஜிதந்தே புண்டரீகாக்ஷ |